FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364129

1. District : திருவள்ளூர் PS: மாதவரம் தண்டையார்பேட்டை Year: 2026 FIR No.: 10/2026 Date: 27.07.2026
மாவட்டம் காவல்நிலையம் பிரிவு ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: as amended by the P.C (Amendment) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act, 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 27.07.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : 3 months Time from : Time to : 11.25 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 27.07.2026 Time : 14.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time : 14.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: காரைக்குடி மாநகராட்சி அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 60 கி.மீ வடகிழக்கு

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. மகேஸ்வரன் (b) Father's/ Husband's Name : சுப்புசாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 36/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : வியாபாரம் (g) Address : 1/147, நேதாஜிபுரம், பொய்யாதார், காரைக்குடி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்,
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. சரவணன், பில் கலைக்டர், மாநகராட்சி அலுவலகம், காரைக்குடி, திருவள்ளூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
– தாமதமில்லை –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 27.07.2026 தேதி 14.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், பொய்யலூர், நேதாஜிபுரம், க.எண்.1/147 என்ற முகவரியில் வசிக்கும் குப்புசாமி என்பவரின் மகன் திரு.K.மகேஸ்வரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாநகராட்சி பில் கலெக்டர் திரு.சரவணன் என்பவரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவரின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27.07.26

A. Kannan
INSPECTOR

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

27/7/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

27.07.2026 at 15.10 hrs

Name: பெயர் A. KANNAN
Rank: நிலை INSPECTOR OF POLICE
& i/c SIVAGANGAI

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண். 10/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

27.07.2026-ம் தேதி 14.30 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 10/2026 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர், K.மகேஸ்வரன், த/பெ.குப்புசாமி, 1/147, நேதாஜிபுரம், பொய்யலூர், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். எனது நெருங்கிய உறவினரான திருமதி.வித்யா, க/பெ.மாணிக்கவாசகம் என்பவர் காரைக்குடி தாலுகாவில் உள்ள பேயம்பட்டியில் வசித்து வருகிறார். அக்கா திருமதி.வித்யா அவர்கள் பேயம்பட்டியில் புதிதாக கட்டியுள்ள வீட்டிற்கு வீட்டுவரி ரசீது போடுவதற்காக, கடந்த 3 மாதங்களுக்கு முன்பு, காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் வரி வசூல் பிரிவில் உள்ள திரு.சரவணன், பில் கலெக்டரை சந்தித்தபோது, பில் கலெக்டர் சரவணன் வீட்டு வரி இரசீது போடுவதற்காக கேட்டதன் பேரில், ஆதார் அடையாள அட்டை நகல், கட்டிட அனுமதி உத்தரவு நகல், மின் கட்டண ரசீது நகல், வீட்டு பத்திர நகல் மற்றும் வில்லங்க சான்று ஆகியவற்றை அவரிடம் கொடுத்துள்ளார். அப்போது, பில் கலெக்டர் சரவணன் எனது அக்கா வித்யாவிடம், "வீட்டு வரி சம்மந்தமான அனைத்து வேலைகளையும் நானே செய்து தருகிறேன், அதற்காக ரூ.20,000/- தர வேண்டும்" என்று கேட்டுள்ளார். எனது அக்கா திருமதி.வித்யா, பில் கலெக்டர் சரவணனிடம், "இப்பதான் கஷ்டப்பட்டு கடன் வாங்கி வீடு கட்டி முடிச்சிருக்கேன், பார்த்து செஞ்சு கொடுங்க" என்று கேட்டதற்கு, இறுதியாக வீட்டு வரி இரசீது போட்டு கொடுப்பதற்கு ரூ.10,000/- லஞ்சம் கேட்டுள்ளார். அதன்பின்னர் சில நாட்கள் கழித்து, பில் கலெக்டர் அக்காவின் வீட்டை வந்து பார்த்துவிட்டு சென்றுள்ளார். பல நாட்களாகியும் வீட்டு வரி இரசீது போட்டுத்தராததால், 25.07.2026ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில், எனது அக்கா திருமதி.வித்யா அவர்கள் காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று, பில் கலெக்டர் திரு.சரவணனை நேரில் சந்தித்து, வீட்டு வரி இரசீது சம்மந்தமாக கேட்டபோது, ரூ.10,000/-த்தை கொடுத்தால் தான் இரசீது போட்டுத்தர முடியும் என்று கூறியுள்ளார், மேலும், பணத்தை கொடுக்காவிட்டால் இரசீது வாங்க மாசக்கணக்கில் அலைய வேண்டியிருக்கும் என்று கூறியுள்ளார். அதற்கு அக்கா பத்தாயிரம் ரெடி பண்ண முடியாது,

பத்தாயிரத்துல பாதியை குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு, அதெல்லாம் குறைக்க முடியாது, பணம் ரூ.10,000/-ல் ரூ.6,000/-த்தை நான் சொல்ற நம்பருக்கு G-Pay பண்ணுங்க, நான் அனைத்து வேலைகளை செய்து முடித்துவிடுகிறேன், மீதத்தொகையான ரூ.4,000/-த்தை இரசீது கொடுக்கும் போது இரசீதுக்கான பணம் ரூ.1300/-த்துடன் சேர்த்து வாங்கிக்கொள்கிறேன் என்று கூறியுள்ளார். எனது அக்கா திருமதி.வித்யா வேறு வழியில்லாமல், அன்றைய தினம் மதியம் சுமார் 1.43 மணிளவில் அவருடைய செல்போன் எண்-8778103331-லிருந்து திரு.சரவணன் சொன்ன Google Pay எண்ணான 9384782820-க்கு ரூ.6,000/- அனுப்பி வைத்துள்ளார். மேற்படி விபரங்களை எனது அக்கா என்னிடம் சொல்லி புலம்ப, நான் 25.07.2026ம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் எனது அலைபேசி எண்.8111070527-லிருந்து பில் கலெக்டர் திரு.சரவணனை அவரது அலைபேசி எண்ணில் தொடர்புகொண்டபோது, சரவணன், என்னிடம், சர்வர் பிரச்சினையாக உள்ளது, திங்கட்கிழமை பணத்தை கொடுத்திட்டு ரசீதை வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறினார். அதன்பின்னர் இன்று (27.07.2026) காலை 10.15 மணியளவில் பில்கலெக்டர் சரவணனை அலைபேசியில் தொடர்புகொண்டபோது, இன்னைக்கு இரசீதை ரெடி பண்ணி கொடுத்துவிடுகிறேன், மீதப்பணம் ரூ.4000/-த்தையும், இரசீதிற்கான கட்டணத்தையும் கொடுத்துட்டு இரசீதை வாங்கிட்டு போங்க என்று சொன்னார். நான் பில் கலெக்டரிடம், சார் வீட்டு வரி இரசீதிற்கு ரூ.4000/- கண்டிப்பாக கொடுக்கணுமா சார், பார்த்து செஞ்சு கொடுங்க சார் என்று கேட்டதற்கு அவர் என்னிடம், பணம் இல்லாமல் இரசீது போட்டுக்கொடுக்க முடியாது என கறாராக தெரிவித்துவிட்டார். அதன்பின்னர், காலை சுமார் 11.23 மணியளவில் பில் கலெக்டர் திரு.சரவணன் என்னை அலைபேசியில் தொடர்புகொண்டு, இரசீது ரெடியாகிடுச்சு, வீட்டு வரி இரசீதுக்கு கட்ட வேண்டிய பணம் ரூ.1300/- உடன் நான் கேட்ட பணம் ரூ.4000/-த்தையும் சேர்த்து கொண்டு வந்து கொடுத்துட்டு, இரசீதை வாங்கிட்டு போங்க என்று கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே, எனது அக்கா வித்யாவிடம் இதுகுறித்து பேசியபோது, அவர் என்னிடம், பில் கலெக்டர் கேட்ட லஞ்ச பணம் ரூ.4000/- மற்றும் இரசீதிற்கான பணம் ரூ.1300/-யையும் கொடுத்து, "தம்பி என்னால் போலீஸ் கேஸ்னு அலைய முடியாது, உனக்கு எல்லாம் தெரியும், நீ சட்டப்படி என்ன பண்ணலாம்னு நினைக்கிறாயோ அப்படியே செய்" என்று சொன்னார். புதியதாக கட்டிய வீட்டிற்கு வீட்டு வரி இரசீது போட்டு கொடுப்பதற்கு லஞ்சமாக பணம் ரூ.10,000/- கேட்டு, அதில் ரூ.6000/-த்தை G-Pay மூலம் வாங்கிக்கொண்டு, தற்போது, தற்போது வீட்டு வரி இரசீதினை வழங்குவதற்கு ரசீதிற்கான கட்டணத்துடன் சேர்த்து, ரூ.4000/- லஞ்சம் கேட்கும் காரைக்குடி மாநகராட்சி

அலுவலகத்தில் பில்கலெக்டராக பணிபுரியும் திரு.சரவணன் அவர்கள் மீது தக்க சட்ட நடவடிக்கை எடுத்து, வீட்டுவரி ரசீது கிடைக்க உதவி செய்யுமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு sd/-xxxxx.

Sir, Received the complaint on 27.07.2026 at 14.00 hrs, genuineness of the complaint was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.10/2026 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 27.07.2026 at 14.30 hrs and took up for investigation. sd.A.KANNAN, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட நீதிபதி, முதன்மை மாவட்ட நீதிமன்றம் சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A. Kannan
INSPECTOR
27/7/2026
Inspector of Police
Vigilance and Anti Corruption
Sivagangai.